விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 புரட்டாதி 08 ஞாயிற்றுக்கிழமை (24.09.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 270

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# யாழ்.பாதுகாப்பு குறித்து பலாலியில் உயர்மட்ட மாநாடு

## முப்படையின் தளபதிகளும் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்பு உயர் அதிகாரிகள் அடங்கிய குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்திற்கான திடீர் விஜயமொன்றினை மேற்கொண்டனர்.

யாழ்ப்பாணம் வந்த அவர்கள் பலாலியில் யாழ்ப்பாணத்தின் பாதுகாப்பு நிலைகள் தொடர்பாக யாழ்.தளபதிகளுடன் விரிவாக ஆலோசனை நடத்தியுள்ளதாக தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.வணிகர் கழகம் ஊடாக நாளை முதல் மா விநியோகம்

### அரச அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மக்களுக்குத் தேவையான மாவை வணிகர் கழகம் ஊடாக விநியோகிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக நிவாரணம் வழங்கப்பட்டு வருவதால் அவர்களின் வேலைப்பளுவைக் குறைப்பதற்காக இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாளை முதல் ஒரு குடும்பத்திற்கு 3கிலோ வீதம் மா வழங்கப்படவுள்ளது. இது தொடர்பாக அரச அதிபர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு;

யாழ்.மாவட்டத்தில் தற்போது நிவாரணம் பெற்றுக் கொள்ளும் குடும்பங்கள், சமுர்த்தி குடும்பங்கள், உயர் வருமானம் பெறும் குடும்பங்களுக்கு பல நோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக அரிசி, கோதுமை மா ,சீனி, பருப்பு போன்ற பொருட்கள் விநியோகிக்கப் படுகின்றன.ப.நோ.கூ.சங்கங்கள் இவ் விநியோகத்தை மேற்கொள்வதில் பாரிய வேலைப் பளுவை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே பாவனையாளர்களின் நலன் கருதி தற்போது பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து இறக்கப்படுகின்ற கோதுமை மாவை முதலாவதாக யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல உணவகங் களுக்கான குறுகிய காலத் தேவைக்கும் யாழ்.மாவட்டத்தில் வதியும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 3 கிலோ வீதம் விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.இந்த ஏற்பாடு நாளை 25.09. 2006 திங்கட்கிழமையில் இருந்து அமுலாக்கப்படும்.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் பாரிய தேடுதல் இரு பெண் உட்பட 18 பேர் கைது

(கொழும்பு)

கொழும்பில் நேற்று பாரிய தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. பல இடங்களில் நேற்று மேற்கொள்ளப்பட்ட தேடுதல் மற்றும் சோதனை நடவடிக்கைகளால் இரு பெண்கள் உட்பட 18 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொழும்புநகரிற்குள்பிரவேசித்த அனைத்து வாகனங்களும் மக்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக கொழும்புப் பிராந்தியதிற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜி ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

பம்பலப்பட்டி டுப்பிளிகேசன் வீதி,பொறளை ,பொல் கொங்கொட, ஒருகெடவத்தை, கிருளைப்பன, தெகிவளை உட்பட பல இடங்களில் இச்சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சந்தேகத்திற்கு இடமானவர்கள் கொழும்பு நகருக்குள் நுழைந் (04 ஆம் பக்கம் பார்க்க)

## 360 மாணவர்கள் திருமலைக்கு பயணம்

(யாழ்ப்பாணம்)

யாழிலிருந்து நேற்றுக் காலை திருகோணமலை நோக்கி ஆயிரம் பயணிகளுடன் கப்பல் புறப்பட்டுச் சென்றதாக சிவில் ஒருங்கிணைப்பு அலுவலர் கேணல் சில்வா தெரிவித்தார்.

இவர்களில் 360 பல்கலைக்கழக மாணவர்களும் ஏனையோர் வெளிநாட்டு பிரஜாவுரிமையுடையவர்களும் ,நோயாளர்கள் மற்றும் முஸ்லிம்களும் என அவர் தெரிவித்தார். (ச–5)

## கொடிகாமத்தில் கொல்லப்பட்ட 5 சடலங்கள் குறித்து விசாரணை

### சாவகச்சேரி நீதிவான் மேற்கொண்டார்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் கச்சாய் வீதியில் எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 4 பேரின் சடலமும் மற்றும் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் ஒரு இளைஞனின் சடலமும் புதைக்கப்பட்டநிலையிலிருந்து மீட்கப்பட்டு விசாரணைகளின் பின்னர் மீண்டும் புதைக்கப்பட்டது.

கடந்த மாதம் 13 ஆம் திகதி கச்சாய் வீதி கொடிகாமத்தில் நண்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் இராசையா திரிஷன் (வயது 21) என்பவர் கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 14 ஆம் திகதி நடைபெற்ற எறிகணைத் தாக்குதலில் விடத்தல்பளையைச் சேர்ந்த கோபாலசிங்கம் பாலகுமார் (வயது 19) என்பவரும் அவரின் உறவினரான மகேந்திரன் மனோரதி (வயது 21) என்ற யுவதியும் இவர்களின் (04 ஆம் பக்கம் பார்க்க)

## மூதூரில் கொல்லப்பட்டவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா நஷ்டஈடு

(திருகோணமலை)

மூதூரில் கொல்லப்பட்டவர்களுக்கான நஷ்டஈடு வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந் நிகழ்வில் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ, மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலர் விமல்வீரவன்ச ,ஜாதிக ஹெல உறுமய வின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தின தேரர் ,போக்குவரத்து அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி உட்பட பல அமைச்சர்கள் பங்குபற்றியுள்ளனர்.

மூதூர் மோதலின்போது உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 15 ஆயிரம் ரூபா வழங்குவதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் தெரிவித்தார்.

இதனையடுத்து அங்கு மக்கள் கொந்தளிப்பில் ஈடுபட்டனர். 15 ஆயிரம் ரூபா நட்டஈடாக வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் கோஷம் எழுப்பினர். இதனையடுத்து இறந்தவர்களுக்கு நட்டஈடாக தலா ஒரு இலட்சம் ரூபா வழங்குவதாக அறிவிக்கப்பட்டது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படுகொலைகளை விசாரிக்க சுயாதீன விசாரணை தேவை

## சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தல்

இலங்கையில் நடைபெறும் சட்டவிரோத படுகொலைகள் குறித்து சுயாதீனமானதாக மட்டுமன்றி சர்வதேச அளவிலான விசாரணை ஆணையம் அமைக்கப்பட வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

அந்த அமைப்பின் அறிக்கை வருமாறு:இலங்கையில் சட்டவிரோத படுகொலைகள், கடத்தல்கள், காணாமல்போதல் தொடர்பில் சர்வதேச அளவிலான விசாரணை ஆணையம் அமைக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளதை வரவேற்கின்றோம்.

இந்த ஆணையமானது சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனித உரிமை சட்ட மீறல்கள் தொடர்பாக முழு அளவிலான விசாரணை நடத்த வேண்டும்.

சர்வதேச அளவிலான விசாரணை ஆணையம் அமைப்பதன் மூலம் அண்மைய வன்முறை நிலைமை குறையக் கூடும் என்ற நம்பிக்கை உள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# சிறுநீரக நோயாளர்கள் இலங்கையில் அதிகம்!

## சுகாதார அமைச்சு கவலை

இலங்கையில் சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

தற்போது இலங்கையில் சிறுநீரக நோயாளர்கள் 20 ஆயிரம் பேர் உள்ளனர். இவர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்காக வருடாந்தம் அரசினால் கோடிக்கணக்கில் செலவிடப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. வருடாந்தம் சுகாதார அமைச்சுக்கு ஒதுக்கப்படும் நிதியில் பெருமளவு சிறுநீரக நோய்க்கு செல விடப்படுவதாகவும் அமைச்சு தெரி வித்துள்ளது. அநுராதபுரம், பொலநறுவை மற்றும் குருநாகல் மாவட்டங்களிலேயே இந் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகமாகவுள்ளனர். (எ)

# கப்பலில் வந்த தபால் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

திருகோணமலையிலிருந்து லிபர்பூல் கப்பலில் எடுத்துவரப்பட்ட தபால்கள் இன்றுமுதல் விநியோகிக்கப்படவுள்ளன.

இதேவேளை யாழ்.குடாவிலிருந்து சேகரிக்கப்பட்டதும் இன்று பிற்பகல் 2 மணிவரையும் சேகரிக்கப்பட்ட கடிதங்களும் நாளை காலை 6 மணிக்கு யாழ்.நகரப் பகுதிகளில் சேகரிக்கப்படும் கடிதங்களும் நாளை புறப்படவுள்ள கப்பலில் அனுப்பி வைக்கப்படவுள்ளது. (ச-133)

# யாழ்.மாநகர சபை

## வீதி வேலைக்கான கேள்வி அறிவித்தல்

கீழ் குறிப்பிட்ட வீதி வேலைக்காக யாழ்.மாநகரசபையில் பதிவு செய்துள்ள இக்ராட் பதிவைக் கொண்டுள்ளதுடன் வற் வரி செலுத்தும் ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் திகதி:-27.09.2006 இருந்து 05.10.2006 பிற்பகல் 3.00 மணி வரை

கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி:- 09.10.2006 நண்பகல் 12 மணிவரை

கேள்வி திறக்கப்படும் திகதி:- 10.10.2006 காலை 10.30 மணிக்கு.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையிலிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வீதிப் பெயருடன் 'வீதி செப்பனிடுவதற்கான கேள்வி' என எழுதி மாநகர ஆணையாளர். யாழ்ப்பாணம் என முகவரியிட்டு பதிவுத் தபால் மூலமோ அல்லது இதற்கென ஆணையாளர் பணிமனையில் வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியிலோ நேரடியாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவ் வேலைக்கு தேவையான தாரினை ஒப்பந்ததாரரே தருவித்துப் பயன்படுத்த வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் இந்து விடுதியில் செயற்பட்டு வரும் வீதி வேலைப் பகுதியில் அறிந்து கொள்ள முடியும்.

| இல. | வேலையின் பெயரும் அமைவிடமும் | ஆகக் குறைந்த இக்ராட் பதிவு | மீளளிக்கக் கூடிய வைப்பு பணம்(ரூபா) | மீளளிக்க முடியாத கேள்வி வைப்பு பணம் வற்வரி உட்பட்ட (ரூபா) |
|---|---|---|---|---|
| 01. | ஆத்தியடி குறுக்கு வீதி | M9 | 4050/= | 575/= |
| 02 | கற்குளம் 4ம் ஒழுங்கை | M9 | 2250/= | 575/= |
| 03. | மாநகர சபை உள்ளக வீதி | M6 | 1720/= | 575/= |
| 04. | பிளச்சஸ் வீதி | M9 | 5250/= | 575/= |
| 05. | செட்டி வீதி மதகு | M9 | 7500/= | 575/= |
| 06. | மீனாட்சி அம்மன் வீதி | M9 | 7500/= | 575/= |
| 07. | சட்டநாதர் வீதி | M9 | 4500/= | 575/= |
| 08. | மார்ட்டீன் ஒழுங்கை | M9 | 3750/= | 575/= |
| 09. | ரட்ணம் அவன்யூ | M9 | 3750/= | 575/= |
| 10. | அரச வீதி | M9 | 610/= | 575/= |
| 11. | விதானையார் வீதி கொழும்புத்துறை | M9 | 6000/= | 575/= |
| 12. | யாழ்.வீதி | M9 | 7500/= | 575/= |
| 13. | C.பொன்னம்பலம் வீதி | M9 | 7500/= | 575/= |
| 14. | இந்து மகளிர் கல்லூரி5ம்ஒழுங்கை | M9 | 2250/= | 575/= |
| 15. | சாஸ்திரியார் வீதி | M9 | 6000/= | 575/= |
| 16. | முத்தமிழ் வீதி | M9 | 4500/= | 575/= |
| 17. | முனீஸ்வரன் வீதி | M9 | 6000/= | 575/= |
| 18. | றக்கா வீதி | M9 | 7500/= | 575/= |
| 19. | கலைப்புலவர் வீதி | M9 | 4500/= | 575/= |
| 20. | சந்தனமாதா கோவில் 2ம் ஒழுங்கை | M9 | 4500/= | 575/= |
| 21. | புரணங்குளம் தொடர் வேலை | M9 | 6000/= | 575/= |
| 22. | பிறவுண் வீதி 5ம் ஒழுங்கை | M9 | 6000/= | 575/= |
| 23. | பருத்தித்துறை வீதி சட்டநாதர் வீதி முன்பக்க ஒழுங்கை | M9 | 3375/= | 575/= |
| 24. | புனித செபஸ்தியான் வீதி தொடர் வேலை | M9 | 2625/= | 575/= |
| 25. | இராசாவின் தோட்டம் உப ஒழுங்கை | M9 | 10500/= | 575/= |
| 26. | ஆசீர்வாதப்பர் வீதி | M9 | 3000/= | 575/= |
| 27. | பூமகள் வீதி | M9 | 3000/= | 575/= |

*குறிப்பு:*-1. கேள்விகள் திறந்து பரிசீலிக்கும்போது தாங்களோ அல்லது தங்கள் பிரதிநிதி ஒருவரோ கேள்விச் சபைக்கு சமுகங்கொடுக்க அனுமதிக்கப்படும்.

2.வேலைகள் யாவும் 15.10.2006ம் திகதிக்கு முன்னர் ஒப்பந்தம் கைச்சாத்திடப் படுவதுடன் 30.11.2006ம் திகதி நிறைவுறுத்தி ஒப்படைக்க வேண்டும்.

எம்.எஸ்.சரவணபவ
மாநகர ஆணையாளர்,
மாநகர சபை.

(C-452)

# அழைப்புக் கட்டளை

## இல.16 பிரிவு 55 (1)

யாழ்ப்பாணம் என்னும் இடத்தில் உள்ள/ மாவட்ட நீதிமன்றத்தில்

கார்த்திகேசு மனோகரன் பெண்
(முன்பு காராளசிங்கம்)மகள் பகீரதி
24.ஜீவசக்தி நிலையம்.
அத்தியடி புது வீதி.
யாழ்ப்பாணம்.

வழக்காளி

வழக்கு இல. மணநீக்கம்/693

எதிர்

கார்த்திகேசு மனோகரன்
பழவத்தை. வியாபாரிமூலை
பருத்தித்துறை.

எதிராளி

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளிக்கு

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி தனக்கும் உமக்கும் இடையேயுள்ள விவாகத்தை இரத்துச் செய்யக் கோரி.

இந் நீதிமன்றத்தில் உமக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளாராதலினால் அதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2006 ஆம் ஆண்டு 09 மாதம் 28 ஆம் நாளன்று, அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்தில் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத் தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரர் இல்லாமலே மேற்கொண்டு நடாத்தப்பட்டு விளங்கப்படும் என அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர்.

பதிவு பெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில் சட்ட முறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக் கூடிய முகவரி ஒன்றைக் கூறும் விபரக் குறிப்பொன்றை கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப் படுத்தப்படுகின்றீர்.

வரைபு
பவானி சற்குணராசா
வழக்காளியின் சட்டத்தரணி

நீதிமன்றக் கட்டளைப்படி
து.சிறீமோகன்.
பதிவாளர் மாவட்ட நீதிமன்றம்
யாழ்ப்பாணம்.

*குறிப்பு:*- விளக்கத் திகதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ் வழக்கு ஏற்படும் திகதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெற விரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரி ஒன்றை இந் நீதிமன்றப்பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80-ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

து.சிறீமோகன்
கையொப்பம் பதிவாளர்.

2006 ஆம் ஆண்டு 09 ஆம் மாதம் 21ஆந் நாளாகிய இன்று

(C-453)

# பின்னுறுதித் தீர்வை

## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

கிருஷ்ணபிள்ளை கிருபாகரன்
பெண் செல்வநாதன் மகள் விஜிதா
இல.6, 1ம் ஒழுங்கை,
அரசடி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

-வழக்காளி

வழ.இல.:மணநீக்கம்/698

எதிர்

கிருஷ்ணபிள்ளை கிருபாகரன்
நாவலடி, இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

-எதிராளி

இவ்வழக்கு 2006 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 01 ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி திரு. இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வழக்காளி சமுகமாக இருக்கவும், வழக்காளி சார்பில் பதிவு பெற்ற சட்டத்தரணி பவானி சற்குணராசா அவர்கள் ஆஜராக இருக்கவும், ஒரு முக விளக்கத்திற்கு நிர்ணயிக்கப்பட்டதற்கு அமைய ஒரு முக விளக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு,

வழக்காளியின் பிராது, வ 1 ஆவணம் வழக்காளி மன்றில் இன்று அளித்த சாட்சியம் ஆகியவற்றை வழக்கேட்டுடன் சேர்த்துப் பரிசீலித்து வழக்காளி பிராதில் கோரிய நிவாரணங்களைப் பெறத் தகுதியுடையவர் எனக் கண்டு வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் 10.01.2003ல் நிறைவேறிய பதிவுத் திருமணத்தை எதிராளி வழக்காளியுடன் எதுவித தொடர்பும் இன்றி தற்போது வன்மமாக உறவறுத்து வாழ்ந்து வருகின்ற காரணத்தினால் இரத்துச் செய்யப்பட்டு வெற்றும் வெறிதாகும் என்று இதனால் கட்டளையிடப்பட்டு பின்னுறுதித் தீர்வையிடப்படுகின்றது.

இந்த விவாகரத்து தீர்வைக்கமைய முற்றாகத் தீர்வை பதியப்பட்டபின் வழக்காளி தன் கன்னிப் பெயரான செல்வநாதன் மகள் விஜிதா என்ற பெயரைப் பாவிக்கலாம் என்றும் திருமணமாகாத ஒரு பெண்ணுக்குரிய சகல உரிமைகளையும் அனுபவிக்கலாம் என்றும் இதனால் கட்டளையிடப்பட்டு பின்னுறுதித் தீர்வையிடப்படுகிறது.

இந்தப் பின்னுறுதித் தீர்வையின் பிரதி 'வலம்புரி' தேசிய தினசரிப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தல் மூலம் எதிராளிக்குப் பதிற் சேவகமாக சேவிக்கப்பட்டு மூன்று மாத காலத்திற்குள் எதிராளி ஆட்சேபனை எதுவும் அணைக்காத பட்சத்தில் இப் பின்னுறுதித் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படும்.

2006 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 01 ஆம் திகதி

இ.த.விக்னராஜா
மாவட்ட நீதிபதி

நீதிமன்றக் கட்டளைப்படி
து.சிறீமோகன்
பதிவாளர் மாவட்ட நீதிமன்றம்
யாழ்ப்பாணம்

வரைபு
பவானி சற்குணராசா
வழக்காளியின் சட்டத்தரணி

(C-421)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறர் மெச்சுவதற்காக செய்யும் செயல் நம்மை நாம் முட்டாளாக ஆக்கிக்கொள்ளத்தான் உதவும்.

-சுவாமி இராமதாசர்

வலம்புரி

# தன்னலம் கருதும் சர்வதேச சமூகம்

இலங்கை இன விவகாரம் சர்வதேச மயப் படுத்தப்பட்டதாக மாறிவிட்டது என்ற கருத்தியல் அரசியல் உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்று.

அதாவது, இலங்கையில் நீண்டகாலமாக இடம்பெற்றுவரும் இனப்பிரச்சினை -அதன் காரணமாக எழுந்த தமிழர் போராட்டம் அதன் நீண்ட காலப்பரிமாணம் இவற்றை நோக்கும் போது இலங்கை இனவிவகாரம் சர்வதேச மயப்படுத்தப்பட்டதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இவ்வாறு சர்வதேசமயமாக்கப்பட்ட இலங்கை விவகாரம் ஏன் இன்னமும் இழுபடுகிறது என்ற கேள்வி பொதுமக்களிடம் எழுவதிலும் ஏகப்பட்ட நியாயங்கள் இருக்கவே செய்கின்றன.

பொதுமக்களிடையே எழுந்துள்ள இந்தக் கேள்வியுடன் எழுகின்ற பதில்கள் என்னவென ஆராய்ந்தால் அதற்குள் இருக்கக்கூடிய உண்மைகள் துலங்கும்.

அதாவது இலங்கை இனவிவகாரம் சர்வதேச மயப்படுத்தப்பட்டதற்கான காரணங்களை அறிவதன் மூலமாக இனப்பிரச்சினை இன்னமும் தீராததற்கான அடிப்படைகளை விளங்கிக்கொள்ள முடியும்.

இலங்கை இனவிவகாரத்தில் சர்வதேச நாடுகள் தலையிட்டதற்குள் அந்த நாடுகளின் சுயநலமே மேலோங்கி இருந்தது.

குறிப்பாக இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், பாகிஸ்தான்,யப்பான் போன்ற நாடுகள் தமது நலனுக்காக இலங்கைக்குள் நுழைய எத்தனித்தனர்.

அந்த நுழைவுக்கு இனப்பிரச்சினை நல்லதோர் நுழைவாயிலாக அமைந்தது. ஆக இலங்கையில் தமிழர்களின் உரிமைகள் மறுக் கப்படுகின்றன.அவர்கள் சுதந்திரமாக வாழும் வழியின்றி அல்லல்படுகின்றார்கள்.

எனவே, நீண்ட காலமாக அவதிப்படும் இலங்கைத் தமிழர்களின் உரிமை விடயத்தில் பொறுப்புள்ள நாடுகள் என்ற வரிசையில் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென்ற நினைப்போடு அந்த நாடுகள் இலங்கைக்குள் காலடி எடுத்து வைக்கவில்லை.

மாறாக, இந்தியாவைப் பொறுத்தவரை அண்டை நாடான இலங்கையில் தனது ஆதிக்கம் இருப்பதை உறுதி செய்வதும் ஏனைய நாடுகள் உள்நுழைவதை தடுப்பதும் கட்டாய தேவையாக இருந்தது.

அதேவேளை அமெரிக்கா ;பிரட்டன்;பாகிஸ்தான் போன்ற நாடுகள் தங்களின் ஆயுதங்களை இலங்கைக்கு விற்பனை செய்வதையும் இந்துமா சமுத்திரத்தில் இந்தியாவின் வல்லாதிக்கத்தை நலிவடையச்செய்வதை நோக்கமாகவும் கொண்டே இலங்கைக்குள் நுழைந்தன.

இவ்வாறு சொந்த நலனை மையமாகக் கொண்டு இலங்கை இனவிவகாரத்தை சர்வதேச மயப்படுத்திய நாடுகளால் இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் எண்ணம் இருக்க முடியாதென்பது தெளிவு.

இங்கு சர்வதேச நாடுகளின் சுயநலம் என்ற எல்லைக்குள் நோர்வேயின் பணி அடங்க மாட்டாதென்பதையும் நினைவிற்கொளல் வேண்டும்.

# கடத்தல்களைத் தடுப்பதற்கு விசேட குழு அமைப்பது அவசியம்

## பிரதி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்



(கொழும்பு)

கொழும்பு உட்பட நாட்டில் அதிகரித்து வரும் கடத்தல், படுகொலைகள் போன்றவற்றைத் தடுக்கவும் பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு உதவிகளைச் செய்யவும் கைதுகள், கடத்தல்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு எதிரான குழு ஒன்று அமைக்கப்படுவது அவசியமாகும்.

இதற்கான யோசனை ஒன்றை அரசியல் அமைப்பு விவகார மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் டியு குணசேகரவிடம் சமர்ப்பித்துள்ளேன் என்று அரசியல் அமைப்பு விவகார மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பு உட்பட நாட்டில் கடத்தல்கள், படுகொலைகள் அதிகரித்து வருகின்றமை குறித்து கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டில் கடத்தல்கள், படுகொலைகள் அதிகரித்து வருகின்றன. இவை தவிர்க்கப்பட வேண்டிய விடயமாகும். இவற்றைத் தவிர்ப்பதற்காக கைதுகள், கடத்தல்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு எதிரான குழு ஒன்று அமைக்கப்படுவது அவசியமாகும்.

இதில் அமைச்சர்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் இதர உறுப்பினர்கள் இடம்பெறுவார்கள். இதற்கான யோசனை ஒன்றை அரசியல் அமைப்பு விவகார மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் டியு குணசேகரவிடம் சமர்ப்பித்துள்ளேன். இந்தக்குழு அமைக்கப்பட்டால் கடத்தல் மற்றும் படுகொலைகளை நிறுத்த முடியும் என்று நம்புகின்றோம்.

பாதிக்கப்படுகின்றவர்கள் மேற்படி குழுவில் முறையிட்டு நியாயத்தைப் பெற்றுக் கொள்ளலாம். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தில் இவ்வாறான குழு ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. குறிப்பாக கொழும்பில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றமையானது கவலைக்குரிய விடயமாகும் என்றார்.

கடத்தல் மற்றும் படுகொலைச் சம்பவங்களில் அரசாங்கத்துக்கோ புலிகளுக்குகோ தொடர்பிருப்பதாக நான் கருதவில்லை. மாறாக மூன்றாம் சக்தி ஒன்று இந் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக கருதுகின்றேன்.

அவ்வாறு மூன்றாம் சக்தி ஒன்று செயற்பட்டாலும் அதனை முறியடிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். அரசாங்கம், ஜே.வி.பி. மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றது. இனப் பிரச்சினை தீர்வு செயற்பாட்டில் அனைத்துக் கட்சிகளினதும் ஆதரவினை பெற வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# ஜே.வி.பியின் நற்சான்றிதழ் பத்திரம் தேவையில்லை என்கிறது சி.சு.கட்சி

மக்கள் விடுதலை முன்னணியின் நற்சாட்சிப் பத்திரம் எதுவும் தமக்கு தேவையில்லை என சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

பொதுத் தேர்தல் நடத்தப்படுமானால் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தமக்கு முன்வைத்துள்ள தொழில் சார் யோசனையை தமது கட்சி பின்பற்ற வேண்டிய நிலை ஏற்படும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் மைத்திபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தொடர்பாக மக்கள்விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அண்மையில் நடைபெற்ற கூட்டம்ஒன்றில் தெரிவித்த கருத்துக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியிடம் உலகின் மிகப் பழமை வாய்ந்த கொள்கையே இருப்பதாக சோமவன்ச அமரசிங்க அண்மையில் கூறியிருந்தார்.

இதேவேளை மக்கள் விடுதலை முன்னணி இன்று மோசமான நிலையை அடைவதற்கு அதன் தலைவரே காரணம் என அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சோமவன்ச நாடு திரும்பும் முன் அக் கட்சி மிகச் சிறந்த முறையில் இருந்தது என அவர் கூறினார். (எ-1)

# அநாமதேய துண்டுப் பிரசுரத்தால் மூதூர் பகுதி மக்கள் இடம்பெயர்வு

(திருகோணமலை)

மூதூர்ப் பகுதியிலிருந்து மக்களை வெளியேறுமாறு துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

மக்களை பீதிக்குள்ளாக்கும் வகையில் இவ் அநாமதேய துண்டுப்பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இத் துண்டுப் பிரசுரங்கள் குறித்து மக்கள் அச்சம் அடையத் தேவையில்லை எனவும் அப் பகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மக்களுக்கு விளக்கமளிக்க இராணுவத்தினரும் பொலிஸாரும் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இத் துண்டுப் பிரசுரத்தினையடுத்து அப்பகுதியிலிருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பத்தினர் இடம்பெயர்ந்துள்ளதாக அங்கிருந்து வரும்செய்திகள்தெரிவித்தன. (எ)

# பேச்சுவார்த்தை மூலமே பிரச்சினைக்குத் தீர்வு

## காண முடியும் என்கிறார் ரவிராஜ்

(கொழும்பு)

யுத்தத்தின் மூலம் அன்றி பேச்சுவார்த்தை மூலமே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு பேச்சுவார்த்தை நடைபெறும் நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையான ஆதரவை வழங்கத் தயாராகவிருப்பதாகவும் அக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார். இதேவேளை யாழ்.மாவட்டத்தில் சுமார் ஒருலட்சத்து 50 ஆயிரம் மாணவர்களும் 7 ஆயிரம் பல்கலைக்கழக மாணவர்களும் தமது கல்வி நடவடிக்கைகளைத் தொடர முடியாதிருப்பதாக ரவிராஜ் குறிப்பிட்டுள்ளார்.

இதன் ஓர் அங்கமாகவே தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள்இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தவிர்ந்த ஏனைய அரசியல் தலைவர்களுடன் சந்தித்து இலங்கையின் தற்போதைய நிலைகுறித்து ஆராய்ந்துள்ளதாக ரவிராஜ் கூறினார். (ச-5)

# சிற்றுண்டிச்சாலைகளுக்கு உணவுப் பொருள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட சிற்றுண்டிச்சாலைகளுக்கு வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் அரச அதிபரின் சிபார்சுக்கு அமைய யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக பொருட்கள் வழங்கப்படுகின்றன.

வணிகர் கழகத்தினால் கோரப்பட்டதற்கு அமைய 60 சிற்றுண்டிச்சாலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் மக்கள் அபிமானம் கூடிய 12 சிற்றுண்டிச்சாலைகள் தெரிவு செய்யப்பட்டு பொருட்கள் விநியோகிக்கப்படுவதாக வணிகர் கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

12 சிற்றுண்டிச்சாலைகளுக்கும் 21 மூடை அரிசி, 12 மூடை மா, 10 மூடை சீனி, 25 கிலோ நிறை கொண்ட 10 மூடை பருப்பு என்பன வழங்கப்படுகின்றன.

இதேவேளை கட்டுப்பாட்டு விலையில் பொருட்கள் வழங்கப்பட்டு வந்தாலும் சிற்றுண்டிச்சாலைகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-133)

# கன்னாதிட்டிக் கிளை சிறாம்பியடிக்கு மாற்றம்

யாழ்.கன்னாதிட்டி வீதியில் அமைந்துள்ள 10 இலக்க பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளையை உடைத்து பொருட்கள் கொள்ளையிடப்பட்டதைத் தொடர்ந்து அக்கிளை ஸ்ரான்லி வீதி சிறாம்பியடி ஒழுங்கைக்கு மாற்றப்பட்டுள்ளதாக யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தெரிவித்துள்ளது. (ச-133)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹெரோயினுடன் இரு இந்தியர் கைது

(கொழும்பு)

ஹெரோயின் போதைப் பொருட்களுடன் நாட்டுக்குள் நுழைய முற்பட்ட இந்தியப் பிரஜைகள் இருவரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

அவர்கள் கொண்டு வந்த போதைப் பொருட்களின் பெறுமதி 2 கோடிக்கும் அதிகம் என சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இரு இந்தியப் பிரஜைகளும் சுங்க அதிகாரிகளினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ச)

# ஜாவாவின் சுரபயா துறையிலிருந்து புலிகளின் ஆயுதக்கப்பல் வருகை

## லங்காதீப செய்தி வெளியீடு

(கொழும்பு)

புலிகளின் ஆயுதக்கப்பல் கிழக்கு ஜாவா தீவின் சுரபூயாதுறை முகத்திலிருந்து வந்ததாகவும் மேலும் இரு ஆயுதக்கப்பல்கள் வரவுள்ளதாகவும் பாதுகாப்பு படையினருக்கும் அரசாங்கத்திற்கும் தகவல்கள் கிடைத்துள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சுரபயா துறைமுகத்திலிருந்து மலாக்கா ஜல சந்திக்கூடாக ஆயுதங்களை ஏற்றி வந்த மேற்படி கப்பலை இந்திய கடலோர பாதுகாப்பு பிரிவினரே முதலில் அவதானித்துள்ளதாகவும் உயர் மட்ட பாதுகாப்பு தகவல்கள் தெரிவித்தன. உடனடியாக இது பற்றிய தகவல்களை இலங்கை கடற்படையினருக்கு அறிவித்ததையடுத்தே இக் கப்பல் தாக்கியழிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுவதாக செய்தி வெளியாகியுள்ளது. (எ-1)

## 12 இளைஞர்களும் பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் வைத்து இராணுவத்தினரால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட 12 பேரும் நேற்று யாழ். நீதிமன்றில் பொலிஸாரினால் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

ஒப்படைக்கப்பட்ட 12 பேர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா, அவர்களை பிணையில் செல்ல அனுமதி வழங்கினார்.

அவர்கள் அனைவரையும் எதிர்வரும் 9 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (ச-5)

## ஐ.தே.க.-சு.க இணைந்து செயற்பட துணைக்குழு!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவை இணைந்து பொதுச் செயற்திட்டத்தில் செயற்படுவதற்காக துணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழு நியமனத்தை கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜி.எல்.பீரிஸ் அறிவித்தார்.

ஒவ்வொரு கட்சியிலிருந்தும் 3 பேர் வீதம் இக்குழுவில் மொத்தம் 6 பேர் இடம் பெறவுள்ளனர்.

கடந்த செப்ரெம்பர் 19 ஆம் திகதி இரு கட்சிகளிடையேயான பேச்சுவார்த்தையில் முன்வைக்கப்பட்ட முக்கிய விடயங்கள் தொடர்பில் இத்துணைகுழு விவாதித்து ஒருமித்த கருத்தை உருவாக்கும். ஐக்கிய தேசியக் கட்சிக் குழுவில் ஜி.எல்.பீரிஸ், ருக்மன் சேனநாயக்க மற்றும் மிலிந்த மொறகொட ஆகியோரும் சுதந்திரக்கட்சி குழுவில் நிமால் சிறிபால டி சில்வா, மைதிரிபால சிறிசேன மற்றும் ஜோன் செனிவிரத்ன ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர் என்றார் அவர். (ச)

## அநாமதேய துண்டுப்பிரசுரத்திற்கு விடுதலைப்புலிகள் கண்டனம்!

(திருகோணமலை)

மூதூரில ஒட்டப்பட்டுள்ள அநாமதேய துண்டுப்பிரசுரத்திற்கும் தங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்துள்ளார்.

இடம் பெயர்ந்து பாதிக்கப்பட்ட மக்களை துன்புறுத்துவதற்காகவே இவ் துண்டுப்பிரசுரம் ஒட்டப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். தாக்குதல்கள் நடைபெறுகின்றபோது அப்பகுதி மக்களுக்கு நேரடியாக தகவலைத் தெரிவிப்போம்.

அவ்வாறு மூதூரில் இடம்பெற்ற சம்பவத்திற்கும் தாம் முன்னறிவித்தலை வெளியிட்டுள்ளதாக எழிலன் தெரிவித்தார்.

அநாமதேய துண்டுபிரசுரங்கள் தொடர்பில் தமக்கு எதுவித தொடர்பும்இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

தாக்குதல்கள் இடம் பெறும் சூழ்நிலைகள் காணப்படுவதால் இராணுவ முகாம்களுக்கு அருகில் உள்ள மக்களை எழும்புமாறு வலியுறுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார். (எ-1)

# கற்றல் செயற்பாட்டை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

## கஜேந்திரன் எம்.பி.வலியுறுத்தல்

(கொழும்பு)

யாழ்.மாணவர்களின் கல்விச் செயற்பாட்டை மேற்கொள்வது குறித்து அரசாங்கமோ கல்வி அமைச்சோ எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வில்லை என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு;

யாழ்.குடாநாட்டில் கடந்த 40 நாட்களாக கல்விச் செயற்பாடுகள் எதுவும் இடம்பெறவில்லை. பாடசாலைகள், முன்பள்ளிகள், உயர் தொழில்நுட்ப நிறுவனம் ,தொழில்நுட்பக்கல்லூரி, பல்கலைக்கழகம், கல்வியியற் கல்லூரி மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன.

இதன் காரணமாக பல்கலைக்கழகம் உள்ளிட்ட 10 ஆயிரம் உயர் கல்வி நிறுவன மாணவர்களும் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான பாடசாலை மாணவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஆகஸ்ட் 11 ஆம் திகதி தொடக்கம் ஏ-9 வீதி மூடப்பட்டுள்ளது. இதன் காரணமாக யாழ்.குடாநாட்டிற்குத் தேவையான உணவுப் பொருட்களை எடுத்துச் செல்ல முடியாத நிலையில் அங்கு அரிசி, மா, சீனி, பால்மா, சவர்க்காரம், எரிபொருள் ,மருந்துப்பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியமான் பொருட்களுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது.

இந் நிலையில் உணவுப் பொருட்களுக்காகவும் பாண் மற்றும் எரிபொருட்களுக்காகவும் அதிகாலையில் இருந்து வரிசையில் நிற்கவேண்டியுள்ளது.

குறிப்பாக பாடசாலைக்குச் செல்ல வேண்டிய ஆயிரக்கணக்கான பிள்ளைகள் மேற்படி பொருள்களுக்காக அலைய வேண்டிய நிலை காணப்படுகிறது.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக சீரான போக்குவரத்துச் சேவைகள் நடத்த முடியாத நிலையில் அரச தனியார் போக்குவரத்துச் சபை காணப்படுகின்றது.

இவை மட்டுமன்றி மாணவர்கள் கடத்தப்படுதல் சித்திரவதை செய்யப்படுதல் போன்ற காரணங்களாலும் தமது கல்வியைத் தொடரமுடியா நிலையில் மாணவர்கள் தவிக்கின்றனர்.

அத்துடன் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக அரசிற்கும் கல்வி அமைச்சின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டபோது சுமுகமான கற்றல் சூழலை ஏற்படுத்த எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

இச் செயலானது தமிழ் மக்களின் கல்வியை திட்டமிட்டு சீரழிக்கும் மறைமுகமான நடவடிக்கையாகும். எனவே மாணவர்கள் மீதான கெடுபிடிகளை நிறுத்தி சுமுகமான கற்றல் சூழலை ஏற்படுத்தவும் கல்வி நிறுவனங்களை உடனடியாக மீள ஆரம்பிக்கவும் அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

## யாழ்ப்பாண மக்கள் வவுனியாவில் தவங்கிடப்பு

(வவுனியா)

வவுனியாவிலுள்ள யாழ்ப்பாணத்து மக்களை கப்பல் மூலம் அனுப்புவதற்கு தான் நடவடிக்கை எடுத்துவருவதாக வவுனியா அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மக்கள் தினமும் வவுனியா செயலகத்திற்கு முன் ஒன்றுகூடி தமது பயணத்திற்கு ஏற்பாடு செய்யுமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

நான் சகலதரப்பினருடனும் தொடர்பு கொண்டு பயண ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுகின்றேன். ஆனால் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என அவர் கவலை தெரிவித்தார்.

கையில் காசு எதுவும் இல்லாத நிலையில் அவர்கள் படும் கஷ்டங்களை தான் அறிவேன் என்றும் யாழ்.மக்களை சொந்த இடங்களுக்கு அனுப்பு முயற்சி மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (ச)

## கொழும்பில்...

திருப்பதாக கிடைத்த தகவலையடுத்தே சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக கொழும்புப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

இத் தேடுதல் நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் பெரும் எண்ணிக்கையான வாகனங்கள் சோதனையிடப்பட்டதாகவும் தெரிவித்தார். (ச)

## கொடிகாமத்தில்...

அயலவர்களான நகுலேஸ்வரன் நகுலேஸ்வரி (வயது 13) என்ற சிறுமியும் கொல்லப்பட்டுள்ளனர்.

மறுநாள் 15 ஆம் திகதி நடைபெற்ற எறிகணைத் தாக்குதலில் பேக்கரி லேன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த லெனாட் திலீப் ஜோசப் என்ற குடும்பஸ்தரும் கொல்லப்பட்டனர்.

இவர்களின் சடலங்கள் அவ் இடங்களில் அவர்களின் உறவினர்களால் புதைக்கப்பட்டது. புதைக்கப்பட்ட இடங்களுக்கு நேற்று நேரில் சென்ற சாவகச்சேரி நீதிவான் பிரேம்சங்கர், சட்டமருத்துவ அதிகாரி பாலசுப்பிரமணியம் ஆகியோர் மரணவிசாரணைகளுக்காக சடலங்களை தோண்டி எடுத்து விசாரணைகளை நடாத்திய பின்னர் சடலங்கள் மீண்டும் புதைக்கப்பட்டன. (ச-5)

## யாழ்.பாதுகாப்பு குறித்து....

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ,முப்படைகளின் தளபதி எயார் சிப் மார்ஷல் ரொனால்ட் பெரேரா மற்றும் முப்படைகளின் தளபதிகள் உட்பட உயர் பாதுகாப்பு அதிகாரிகள் இவ் உயர் மட்ட மாநாட்டில் கலந்து கொண்டனர்.

இம் மாநாட்டில் குடா நாட்டின் முப்படைகளின் கட்டளையிடும் தளபதிகளும் கலந்து கொண்டனர்.

குடாநாட்டில் உள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் நீண்ட நேரம் ஆராயப்பட்டதாக தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தின் எதிர்கால பாதுகாப்பு வேலைத்திட்டம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் படைத்தளபதிகளுக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

பலாலிக்கு வந்த உயர் மட்ட அதிகாரிகள் யாழ்ப்பாணத்திற்கான சுற்றுப் பயணம் எதனையும் மேற்கொள்ளவில்லை என தெரிவிக்கப்பட்டது. (ச)

## யாழ்.வணிகர் கழகம்...

இவ் விநியோகத்தை ஒருங்கிணைப்பதற்கான பொறுப்பு யாழ்.வணிகர் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆகவே இவ் விநியோகம் சம்பந்தமாக செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் சம்பந்தமாக மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்பும் ஏனைய யாழ். மாவட்டத்தில் இயங்கும் வர்த்தக சங்கங்கள் வணிகர் கழகத்துடன் தொடர்பு கொண்டு தத்தமது பிரதேசத்துக்கான மாவை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

அத்தோடு மாவைக் கொள்வனவு செய்யும் பொதுமக்களும் தத்தமது உடனடித் தேவைக்கேற்ற வகையில் மாத்திரம் கொள்வனவை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்த விநியோகத்தில் சகல வர்த்தகர்களும் பொதுமக்களும் தங்களுடைய பரிபூரண ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்வதுடன் ஒரு கிலோ மாவின் ஆகக்கூடிய சில்லறை விலை ரூபா 40 எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றேன் என யாழ்.அரச அதிபரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.8 ... அவர்களது அச்சகத்தில் 24.09.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org